# விரைவு நீதிமன்றம் (ந.வ), உத்தமபாளையம்

**முன்னிலை: திரு.S.அமலநாத கமலக்கண்ணன், B.A.,B.L.,Hon's.,**
நீதித்துறை நடுவர், விரைவு நீதிமன்றம்,
உத்தமபாளையம்.

2026–ஆம் ஆண்டு ஜீலை திங்கள் 28–ஆம் நாள் செவ்வாய்க்கிழமை

**சுருக்குமுறை ஆவண வழக்கு எண்.268/2025**

CNR.No.TNTH080005852025

| | |
|---|---|
| புகார்தாரர் | க.பாலமுருகன் (வயது 44/2026)<br>த/பெ.கருப்பு,<br>எண்.5–1–13, நா வீரணத்தேவர் தெரு,<br>மார்க்கையன்கோட்டை,<br>உத்தமபாளையம் தாலுகா, தேனி மாவட்டம். |
| எதிரி | ச.கண்ணபிரான் (வயது 42/2026)<br>த/பெ.சங்கர பாண்டியன்,<br>26 வது வார்டு, கதவிலக்கம் 10,<br>ராஜயன் சந்து,<br>சின்ன சவுண்டம்மன் கோவில் தெரு,<br>போடி நாயக்கனூர்,<br>போடி நாயக்கனூர் தாலுகா, தேனி மாவட்டம். |
| குற்றம் முறையிட்டது | மாற்று முறை ஆவணச் சட்டம் பிரிவுகள் 138, 142–ன் கீழ் |
| காசோலை எண். (100009) | 10.06.2025 |
| காசோலை தொகை | Rs.2,00,000/– |
| வசூலுக்கு தாக்கல் செய்த நாள் | 10.06.2025 |
| காசோலை திரும்பிய நாள் | 11.06.2025 |
| காசோலை திரும்பிய காரணம் | Funds Insufficient |
| அறிவிப்பு அனுப்பிய நாள் | 25.06.2025 |
| அறிவிப்பு பெறப்பட்ட நாள் | 01.07.2025 |
| வழக்கு தாக்கல் நாள் | 25.07.2025 |
| தீர்ப்பு நாள் | 28.07.2026 |



AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.07.28 17:19:26 +0530

| | |
|---|---|
| புகார்தாரர் தரப்பு வழக்கறிஞர் | திரு.S.கனி |
| எதிரி தரப்பு வழக்கறிஞர் | திரு.S.ராஜா |
| **தீர்வு** | **எதிரி மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138–ன் கீழ் குற்றவாளி இல்லை என முடிவு செய்து B.N.S.S பிரிவு 278(1)–ன் கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது.** |

இருதரப்பு வாதம் கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்,

**தீர்ப்புரை**

1. **புகார்தாரர் வழக்கு சுருக்கம்:**

புகார்தாரர் பில்டிங் காண்ட்ராக்டர் தொழில் செய்து வருகிறார். எதிரி ஏலக்காய் தொழில் செய்து வருகிறார். அதன் அடிப்படையில் புகார்தாரருக்கும், எதிரிக்கும் நீண்ட நாட்களாக நன்கு பழக்க வழக்கம் ஏற்பட்டது. எதிரி தான் செய்யும் ஏலக்காய் தொழிலுக்கு பணம் தேவைப்படுவதாக கூறி புகார்தாரரிடம் கடந்த 05.01.2025ம் தேதி பணம் கேட்டுள்ளார். புகார்தாரர் மூன்று நாட்கள் கழித்து தருவதாக கூறி கடந்த 08.01.2025ம் தேதியன்று தனது வீட்டில் வைத்து ரூ.2,00,000/–ஐ எதிரிக்கு ரொக்கமாக கொடுத்துள்ளார். அதற்கு ஆதரவாக 10.06.2025 நாளிட்ட 100009 என்ற எண் கொண்ட CSB வங்கி, போடி நாயக்கனூர் கிளைக்குரிய ரூ.2,00,000/–த்திற்கான காசோலையை கொடுத்துள்ளார். அந்த காசோலையை பணமாக்கும் பொருட்டு புகார்தார் தான் கணக்கு வைத்துள்ள இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, சின்னமனூர் கிளையில் 10.06.2025ம் தேதியன்று வசூலுக்கு தாக்கல் செய்துள்ளார். மேற்படி காசோலையானது "Funds Insufficient" என்ற காரணத்தினால் மதிப்பு மறுக்கப்பட்டு 11.06.2025 அன்று திரும்பியது. காசோலை தொகையை கேட்டு எதிரிக்கு 17.06.2025 நாளிட்டு அனுப்பிய சட்ட அறிவிப்பை 18.06.2025ம் தேதியன்று எதிரி பெற்றுகொள்ளாமல் திருப்பி அனுப்பி, மீண்டும் 25.06.2025ம் தேதி



AMALANATHA KAMALAKANNAN S

Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.07.28 17:19:35 +0530

அனுப்பிய சட்ட அறிவிப்பை 01.07.2025ம் தேதி பெற்று கொண்டு, 07.07.2025ம் தேதி பதில் அறிவிப்பு அனுப்பி, பணம் செலுத்தாமல் இருந்துள்ளார். மேலும் எதிரி காசோலையின் தொகையை செலுத்தாமல் புகார்தாரரை மோசடி செய்து ஏமாற்றும் நோக்கத்துடன் செயல்பட்டதால் எதிரி மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவுகள் 138 மற்றும் 142ன் கீழ் குற்றம் இழைத்துள்ளார் என்பதால் எதிரியை தண்டிக்க வேண்டி இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளார்.

**2.** புகார்தாரர் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலம், புகார்மனு ஆவணங்களை பரிசீலனை செய்து பார்த்ததில் எதிரிக்கு எதிராக வழக்கு விசாரணைக்கு உத்தரவிட முதல் தோற்ற ஆதாரம் இருந்ததால் எதிரிக்கு பிரிவு 227 B.N.S.S-ன் கீழ் அழைப்பாணையுடன் இணைத்து புகார் நகல் அனுப்பப்பட்டது.

**3.** எதிரி அழைப்பாணையையும், புகார் நகலையும் பெற்றுக்கொண்டு நீதிமன்றத்தில் ஆஜரானதும் எதிரியிடம் B.N.S.S பிரிவு 274-ன் படி குற்றத்தின் சாரம்சம் குறித்து கேள்வி கேட்கப்பட்டது "பொய் வழக்கு" என்றும், எதிரி குற்றத்தை மறுத்து விசாரணை செய்ய வேண்டும் என்று கூறியுள்ளார்.

**4. <u>புகார்தாரர் தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள்:</u>**

புகார்தாரர் திரு.பாலமுருகன் தனது புகாரில் கூறியுள்ள சங்கதிகளை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்து அது ம.சா.1 முதல் விசாரணை சாட்சியமாக பதிவு செய்யப்பட்டுள்ளது. எதிரி கொடுத்த 10.06.2025ம் தேதியிட்ட 100009 என்ற எண் கொண்ட CSB வங்கி, போடி நாயக்கனூர் கிளைக்குரிய ரூ.2,00,000/-க்கான காசோலை அசல் ம.சா.ஆ.1 ஆகவும், மேற்படி காசோலை "Funds Insufficient" என்ற காரணத்தினால் மதிப்பு மறுக்கப்பட்டு 11.06.2025ம் தேதியன்று திரும்பியதற்கான வங்கி குறிப்புரை அசல் ம.சா.ஆ.2 ஆகவும், மேற்படி காசோலைக்குரிய தொகையை கேட்டு எதிரிக்கு அனுப்பிய 17.06.2025



AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.07.28 17:19:41 +0530

மற்றும் 18.06.2025 நாளிட்ட சட்ட அறிவிப்பு அஞ்சலக இரசீது மற்றும் அறிவிப்பினை எதிரி பெற்றுக்கொள்ளாமல் திருப்பப்பட்ட கவர் அசல் ம.சா.ஆ.3 ஆகவும், மேற்படி காசோலை தொகையை கேட்டு எதிரிக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பு மற்றும் அஞ்சலக ரசீது நகல் மற்றும் அசல் ம.சா.ஆ.4 ஆகவும், மேற்படி அறிவிப்பை எதிரி 01.07.2025 ம் தேதியன்று பெற்று கொண்டதற்கான ஒப்புதல் அட்டை அசல் ம.சா.ஆ.5 ஆகவும், மேற்படி அறிவிப்பினை பெற்றுக்கொண்ட எதிரி 07.07.2025 ம் தேதியன்று அனுப்பிய பதில் அறிவிப்பு அசல் ம.சா.ஆ.6 ஆகவும், புகார்தாரரின் ஆதார் அடையாள அட்டை நகல் ம.சா.ஆ.7 ஆகவும் ம.சா.1 குறியீடு செய்துள்ளார். மேலும் எதிரியை புகார்தாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்கையில், கடந்த 19.06.2025 ம் தேதியன்று எதிரி போடி காவல் நிலையத்தில் எந்த புகாரும் கொடுக்கவில்லை என்று தகவல் பெறும் உரிமை சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுவிற்கு அளித்த அறிக்கை ம.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5. <u>பிரிவு 351(1)(b) வினா மற்றும் பதில்:</u>

புகார்தாரர் தரப்பில் விசாரிக்க கூடுதல் சாட்சியம் இல்லை என மேற்குறிப்பு செய்ததால் புகார்தாரர் தரப்பு சாட்சியத்தில் எதிரிக்கு பாதகமாக உள்ள அம்சங்களை தொகுத்து BNSS பிரிவு 351(1)(ஆ)–ன் கீழ் வினவிய போது புகார்தாரர் தரப்பு சாட்சியத்தை பொய் வழக்கு என்றும், எனது பதிலை தட்டச்சு செய்து தாக்கல் செய்கிறேன் என்றும், ம.சா.ஆ.1.ஆன காசோலை மற்றும் அதிலுள்ள கையொப்பம் தன்னுடையது தான் என்றும், தனது தரப்பில் விசாரிக்க சாட்சி உள்ளது என்று கூறினார்.

6. <u>எதிரி தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள்:</u>

6.1. எ.சா.1 திரு.கண்ணபிரான் தனது சாட்சியத்தில், புகார்தாரரை தெரியாது. கொரோனா காலத்திற்கு முன்பு கந்துவட்டி கனி என்பவரிடம் நான் ரூ.2 லட்சம் பணம் வாங்கியிருந்தேன். அதன் பின்பு எனக்கு இருதய அடைப்பு



AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.07.28 17:19:47 +0530

ஏற்பட்டு கேரளா மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தேன். நான் சிகிச்சையில் இருந்து வந்த பிறகு என்னிடம் கந்து வட்டி கனி அசல் மற்றும் வட்டி பணம் கேட்டதன்பேரில் நான் கொடுக்க வேண்டிய அசல் மற்றும் வட்டி தொகையை திருப்பி செலுத்தி விட்டேன். மீண்டும் என்னிடம் வட்டி தர வேண்டும் என்று பிரச்சினை செய்ததால், தர்மர் என்பவர் முன்னிலையில் சமரசம் பேசி வட்டியை வாங்கி ரூ.60 ஆயிரம் வட்டியை கந்துவட்டி கனியிடம் கொடுத்தேன்.

6.2. மீண்டும் எனக்கு வட்டி வேண்டும் என்று கூறி என்னை அடித்து எனது இருசக்கர வாகனத்தை கனி மற்றும் அவரது அக்கா மகன் நிஷாந்த் பிடுங்கி சென்றார்கள். இது சம்பந்தமாக போடி நகர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். மேற்படி இருசக்கர வாகனத்தில் வைத்திருந்த காசோலையை வங்கியில் வசூலுக்கு தாக்கல் செய்து திருப்பப்பட்டது சம்மந்தமாக எனக்கு குறுஞ்செய்தி வந்தது. காவல் ஆய்வாளர் கந்துவட்டி கனியை போன் செய்து காவல் நிலையம் அழைத்து பேசி எனது இருசக்கர வாகனத்தை பெற்று தந்தார். காசோலை சம்பந்தமாக நீதிமன்றத்திற்கு சென்று பார்த்து கொள்ளும்படி காவல் ஆய்வாளர் கூறிவிட்டார். கனி எனது காசோலையை எடுத்து வேறு நபர் மூலம் பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளார். எதிரி கந்துவட்டி கனி என்பவருக்கு G Pay மூலம் வட்டி செலுத்தியதற்கான ஆவணத்தை எ.சா.ஆ.2 ஆக தாக்கல் செய்துள்ளார்.

6.3. எ.சா.2 தர்மர் தனது சாட்சியத்தில், புகார்தாரரை எனக்கு தெரியாது. எதிரியை தெரியும். கந்துவட்டி கனிக்கும், கண்ணபிரானுக்கும் கொடுக்கல் வாங்கல் இருந்தது. ஏலக்காய் மார்க்கெட்டில் நான் நின்று கொண்டிருந்தபோது கனிக்கும், எதிரிக்கும் இடையே தகராறு நடந்தது. நான் இருவரிடமும் சமரசம் பேசி அறுபதாயிரம் எதிரியிடமிருந்து பெற்று கனியிடம் கொடுத்தேன். பின்பு 10 நாட்கள் கழித்து எதிரியிடம் கனி இருசக்கர வாகனத்தை பிடுங்கி சென்றது சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்த விபரத்தை என்னிடம்



AMALANATHA KAMALAKANNAN S

Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.07.28 17:19:54 +0530

கூறினார். கனி என்பவர் பாலமுருகன் மூலம் எதிரி மீது காசோலை வழக்கு தாக்கல் செய்துள்ளார். அந்த வழக்கு சம்பந்தமாக கனி எ.சா.2 க்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை எ.சா.ஆ.1 ஆக தாக்கல் செய்துள்ளார்.

7. <u>புகார்தாரர் தரப்பு வாதம்:</u>

புகார்தாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், புகார்தாரர் அவரது சாட்சியத்தின் மூலமும், ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.8 வரையிலான ஆவணங்கள் மூலமும், எதிரி மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது என வாதம் முன்வைத்துள்ளார். ம.சா.ஆ.1 ஆன காசோலையும், அதிலுள்ள கையொப்பமும் தன்னுடையதுதான் என்று எதிரி ஒப்புக்கொண்டுள்ளதால் மாற்றுமுறை ஆவணச் சட்டத்தின் அனுமானங்கள் புகார்தாருக்கு ஆதரவாக உள்ளது. புகார்தாரர் மீது எதிரி காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை. எதிரி பொய்யான விபரங்களை கூறி பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளார். எதிரிக்கு ஆதரவாக எ.சா.2 பொய் சாட்சியம் அளித்துள்ளார். புகார்தாரருக்கு ஆதரவாக இருக்கும் அனுமானங்கள் எதிரி தரப்பில் மறுக்கப்படவில்லை. எனவே எதிரி மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது என்ற வாதத்தினை முன்வைத்தார்.

8. <u>எதிரி தரப்பு வாதம்:</u>

எதிரி தரப்பில் எழுத்துப்பூர்வமான வாதுரை தாக்கல் செய்யப்பட்டது. கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், எதிரி புகார்தாரரிடம் ரூ.2 லட்சம் கடனாக வாங்கவில்லை. கந்துவட்டி கனி என்பவரிடம் எதிரி பெற்ற வட்டி கடனை திருப்பி செலுத்திய பிறகும், தனது இருசக்கர வாகனத்தை பிடுங்கி, வாகனத்தில் வைத்திருந்த காசோலையை எடுத்து புகார்தாரரிடம் கொடுத்து பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளார். எதிரி அவரது தரப்பினை முன்னிலைப்படுத்தி பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளார். புகார்தாரரை எதிரிக்கு தெரியாது, அவருடன் எந்த வரவு செலவும் இல்லை. எதிரிக்கும், கனி என்பவருக்கும் இடையே வரவு செலவு இருந்தது என்பதை எ.சா.ஆ 2 மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. கந்து வட்டி



AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.07.28 17:20:01 +0530

கனி என்பவர் வழக்கறிஞர் என்பதால் அவர் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்தும் வழக்கு பதிவு செய்யவில்லை. எதிரி காசோலை தொகையை செலுத்த கடமைப்பட்டவர் இல்லை. ஆகையால் புகார்தாரருக்கு ஆதரவாக இருப்பதாக கூறப்படும் அனுமானங்கள் மறுக்கப்பட்டுள்ளது என்பதால் எதிரிக்கு எதிராக பிரிவு 138 மாற்றுமுறை ஆவணச்சட்டத்தின் கீழ் தண்டிக்க இயலாது என்ற வாதத்தை முன்வைத்தார்.

**9.** சான்றாவணங்கள் மற்றும் இதர வழக்கு ஆவணங்கள் கவனமாக பரிசீலிக்கப்பட்டு கருத்தில் எடுத்து கொள்ளப்பட்டது.

**10.** இவ்வழக்கில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றமான மாற்றுமுறை ஆவண சட்ட பிரிவு 138-ன் படி சந்தேகத்திற்கு இடமின்றி நிருபிக்கப்பட்டுள்ளதா ? என்பது தீர்விற்குரிய பிரச்சனையாகும்.

10.1. எதிரி மீதான குற்றத்தை நிரூபிக்க பிரிவு 138 மாற்றுமுறை ஆவணச் சட்டத்தின் உட்கூறுகள் நிரூபிக்கப்பட்டிருக்க வேண்டும்.

- முதலில் எதிரி, புகார்தாரருக்கு 10.06.2025-ம் தேதியிட்டு ரூ.2,00,000/-க்கு கொடுத்த CSB வங்கி, போடி நாயக்கனூர் கிளைக்குரிய ம.சா.ஆ.1 காசோலையானது உரிய காலத்திற்குள் வங்கியில் வசூலுக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

- மேற்படி காசோலையானது கடந்த 11.06.2025ம் தேதியன்று Funds Insuffcient என்ற காரணத்தினால் மதிப்பு மறுக்கப்பட்டு இந்தியன் ஒவர்சீஸ் வங்கி, சின்னமனூர் கிளையிலிருந்து திருப்பப்பட்டது என்பது ம.சா.ஆ.2 ஆவணத்தின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

- காசோலை திரும்பியது குறித்து 25.06.2025-ம் தேதியன்று புகார்தாரர் அவரது வழக்கறிஞர் மூலம் உரிய காலத்திற்குள் எதிரிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளது ம.சா.ஆ.4 ஆவணத்தின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.



AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.07.28 17:20:07 +0530

- மேற்படி அறிவிப்பை 01.07.2025–ம் தேதியன்று எதிரி பெற்று கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை அசல் ம.சா.ஆ.5 ஆவணத்தின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.
- மேற்படி அறிவிப்பிற்கு 07.07.2025 ம் தேதியன்று எதிரி அனுப்பிய பதில் அறிவிப்பு அசல் ம.சா.ஆ.6 ஆவணத்தின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

அதன்பின்னர் எதிரி 15 நாட்களுக்குள் பணம் செலுத்தாமல் இருந்ததால் உரிய காலத்திற்குள் புகார்தாரர் இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளார்.

10.2. தற்போது தாவா காசோலையானது எதிரியின் காசோலைதானா? என்றும், எதிரி தன்னுடைய சட்டப்படியான கடனை தீர்க்க தான் புகார்தாரருக்கு தாவா காசோலையை கொடுத்தாரா? என்பதை பரிசீலனை செய்கையில், தாவா காசோலையானது எதிரியின் காசோலைதான் என்றும், அதிலுள்ள கையொப்பம் தன்னுடையதுதான் என்று அவர் ஒப்புக்கொண்டுள்ளார். எனவே மாற்றுமுறை ஆவணச் சட்டப்பிரிவு 118 (a)–ன்படி வழக்கு காசோலை மறுபயனுக்காகத்தான் கொடுக்கப்பட்டுள்ளது என்று புகார்தாரருக்கு ஆதரவாக அனுமானம் நிலவுகிறது. மேலும், K.Bhaskaran Vs. Sankaran Vaidhyan Balan (1999 (4) RCR (Criminal) 309) என்ற மாண்புமிகு உச்சநீதிமன்ற தீர்ப்பின்படி, எதிரி காசோலையில் உள்ள கையொப்பத்தை மறுக்கப்படவில்லை என்பதால் மாற்றுமுறை ஆவண சட்ட பிரிவு 139–ன் படி காசோலையானது சட்டப்படியான கடனை தீர்ப்பதற்காக கொடுக்கப்பட்டதுதான் என்று புகார்தாரருக்கு ஆதரவாக அனுமானம் நிலவுகிறது.

10.3. மேற்கண்ட அனுமானங்கள் புகார்தாரருக்கு ஆதரவாக இருக்கும் பட்சத்தில் எதிரி தரப்பில் மறுக்ககூடிய அனுமானங்கள் ஆகும். Basalingappa Vs mudibasappa என்ற மாண்புமிகு உயர்நீதிமன்ற தீர்ப்பின்படி எதிரி தனது தரப்பு



AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.07.28 17:20:14 +0530

சாட்சியங்களை முன் நிறுத்துவதன் மூலமாகவோ அல்லது புகார்தாரர் சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்தோ Pre–Ponderance of probability என்ற அடிப்படையில் தனது தரப்பிற்கு ஆதரவாக எதிர்வாதத்திற்குரிய சந்தேகத்தை ஏற்படுத்துவதன் மூலம் மறுக்கலாம்.

10.4. மேற்படி அனுமானங்கள் புகார்தாரருக்கு ஆதரவாக இருக்கும் நிலையில், எதிரி தரப்பில் இருந்து மறுக்கப்படும் விபரங்கள் யாதெனில்,

"எதிரி புகார்தாரரிடம் ரூ.2 லட்சம் கடன் வாங்கவில்லை. எதிரி கந்துவட்டி கனி என்பவரிடம் பெற்ற கடனை திருப்பி செலுத்திய பிறகும், எதிரியின் இருசக்கர வாகனத்தை கனி என்பவர் பிடுங்கி, வாகனத்தில் வைத்திருந்த காசோலையை எடுத்து புகார்தாரரிடம் கொடுத்து பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளார்" என்று புகார்தாரரின் வழக்கினை மறுத்து எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது.

10.5. புகார்தாரர் அவரது புகார்மனுவில், எதிரியின் ஏலக்காய் தொழிலுக்காக அவர் கடன் பெற்று, அதற்கு ஆதரவாக தாவா காசோலையை கொடுத்ததாகவும், அதனை வங்கியில் வசூலுக்கு தாக்கல் செய்தபோது பணம் வசூலாகாமல் Funds Insufficient என காரணம் குறிப்பிட்டு காசோலையானது திருப்பப்பட்டது என்று கூறியுள்ளார். புகார்தாரர் அவரது புகார்மனுவில் உள்ள விபரங்களை ஒத்திசைத்தே நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளார்.

10.6. புகார்தாரரின் வழக்கை நிரூபிக்கும் வகையில், ம.சா.ஆ.1 ஆன எதிரியின் காசோலையை புகார்தாரர் தாக்கல் செய்துள்ளார். தாவா காசோலை வங்கியிலிருந்து மறுக்கப்பட்ட பின்னர் புகார்தாரர் எதிரிக்கு இரண்டு முறை வழக்கறிஞர் அறிவிப்புகள் அனுப்பியுள்ளார். இரண்டாவது அறிவிப்பினை எதிரி பெற்றுக்கொண்டு அவரது தரப்பினை முன்னிலைப்படுத்தி பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளார்.

10.7. எதிரி தனது பதில் அறிவிப்பில், புகார்தாரரை தனக்கு தெரியாது என்றும், கந்துவட்டி கனி என்பவரிடம் கடன் பெற்று மாதந்தோறும் வட்டியை



AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.07.28 17:20:20 +0530

கந்துவட்டி கனி என்பவரின் G Pay மூலமும், நேரிலும் ரொக்கம் செலுத்தி வந்தேன் என்றும், கடந்த 09.06.2025 ம் தேதியன்று கனி மற்றும் நிஷாந்த் தனது இருசக்கர வாகனத்தின் சாவியை பிடுங்கி சென்றார்கள் என்றும், மேற்படி எதிரி கனி என்பவருக்கு எதிரி அசலாகவும், வட்டியாகவும் செலுத்த வேண்டிய பாக்கி ரூ.60 ஆயிரம் செலுத்தியும், இருசக்கர வாகனத்தை தராததால் போடி நாயக்கனூர் காவல் நிலையத்தில் கனி மற்றும் நிஷாந்த் மீது புகார் கொடுத்தேன் என்றும், மேற்படி இருசக்கர வாகனத்தின் பின்சீட்டில் வைத்திருந்த காசோலை புத்தகத்தை திருடி புகார்தாரரிடம் கொடுத்து அவர் மூலம் வசூலுக்கு தாக்கல் செய்து பொய்யான விபரங்களை கூறி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்று குறிப்பிட்டுள்ளது.

10.8. எதிரி தானாக முன்வந்து தன்னை எ.சா.1 ஆக விசாரணை செய்துள்ளார். எ.சா.1 தனது சாட்சியத்தில், புகார்தாரரை தெரியாது. கொரோனா காலத்திற்கு முன்பு கந்துவட்டி கனி என்பவரிடம் நான் கடன் வாங்கியிருந்தேன். கந்து வட்டி கனி அசல் மற்றும் வட்டி பணம் கேட்டதன்பேரில் நான் கொடுக்க வேண்டிய அசல் மற்றும் வட்டி தொகையை திருப்பி செலுத்தி விட்டேன். மீண்டும் என்னிடம் வட்டி தர வேண்டும் என்று பிரச்சினை செய்ததால், தர்மர் என்பவர் முன்னிலையில் சமரசம் பேசி ரூ.60 ஆயிரம் கந்துவட்டி கனியிடம் கொடுத்தேன். மீண்டும் எனக்கு வட்டி வேண்டும் என்று கூறி என்னை அடித்து எனது இருசக்கர வாகனத்தை கனி மற்றும் நிஷாந்த் பிடுங்கி சென்றார்கள். கனி எனது காசோலையை எடுத்து வேறு நபர் மூலம் பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று எதிரி அவரது பதில் அறிவிப்பில் கூறியுள்ள விபரங்களை ஒத்திசைத்து சாட்சியம் அளித்துள்ளார்.

10.9. எதிரியை புகார்தாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்தபோது, மேற்படி விபரங்களை ஒத்திசைத்தே சாட்சியம் அளித்துள்ளார். மேலும் எதிரியை புகார்தாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்தபோது, **" புகார்தாரர் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால், இல்லை என்று கூறி உங்கள் மீது**



AMALANATHA KAMALAKANNAN S

Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.07.28 17:20:27 +0530

**கொடுத்தேன் என்று புகார்தாரர் தரப்பு வழக்கறிஞரை எதிரி கைநீட்டி காட்டியதால் கந்துவட்டி கனி என்பவர் யார் என்று நீதிமன்ற கேள்வி கேட்டபோது புகார்தாரர் தரப்பு வழக்கறிஞரை எதிரி காண்பித்து"** சாட்சியம் அளித்துள்ளார். மேலும் வழக்கு ஆவணங்களை பார்க்கும்போது, வழக்கறிஞர் கனி என்பவர்தான் புகார்தாரருக்கு வழக்கறிஞராக வக்காலத்து தாக்கல் செய்து ஆஜராகியுள்ளார் என்றும், எதிரிக்கு வழக்கறிஞர் அறிவிப்புகள் அனுப்பியுள்ளார் என்பது தெரியவருகிறது. ஆகையால் புகார்தாரரின் வழக்கறிஞரான கனி என்பவரைதான் எதிரி அவரது பதில் அறிவிப்பிலும், நீதிமன்ற சாட்சியத்திலும் கந்துவட்டி கனி என்று குறிப்பிட்டுள்ளார் என்று புலப்படுகிறது.

10.10. மேற்படி புகார்தாரரின் வழக்கறிஞரை குறிப்பிட்டு எதிரி பதில் அறிவிப்பு அனுப்பிய பின்னர் அதனை மறுத்து புகார்தாரர் அவரது புகார் மனுவிலும், நிரூபண வாக்குமூலத்திலும் எவ்வித விளக்கமும் அளிக்கவில்லை. மேலும் புகார்தாரரின் வழக்கறிஞரிடம்தான் வட்டி கடன் பெற்றேன் என்று எதிரி பதில் அறிவிப்பு அனுப்பியுள்ள நிலையில், அதனை புகார்தாரர் அவரது வழக்கு ஆவணங்களில் குறிப்பிட்டு மறுக்காததற்கு எவ்வித விளக்கமும் அளிக்கவில்லை.

10.11. மேலும் புகார்தாரரின் வழக்கறிஞரான கனி என்பவருக்கும், எதிரிக்கும் இடையே வரவு செலவு இருந்தது என்பதை நிரூபிக்கும் வகையில், புகார்தாரரின் வழக்கறிஞரான கனி என்பவருக்கு எதிரி சில தவணைகள் G Pay மூலம் பணம் செலுத்தியதை நிரூபிக்கும் வகையில் எ.சா.ஆ.2 ஆன ஆவணத்தை எதிரி தாக்கல் செய்துள்ளார். மேற்படி ஆவணத்தை பரிசீலனை செய்கையில், புகார்தாரரின் வழக்கறிஞரான கனி என்பவரின் புகைப்படம் காணப்பட்டது. மேலும் எதிரிக்கும், புகார்தாரரின் வழக்கறிஞர் கனிக்கும் வட்டி வரவு செலவு இருந்தது என்ற எ.சா.2 ஆன தர்மர் சாட்சியம் அளித்துள்ளார். புகார்தாரரின் வழக்கறிஞரான கனி என்பவருக்கும், எதிரிக்கும் இடையே வரவு செலவு இல்லை என புகார்தாரரின் வழக்கறிஞர் குறிப்பிட்டு மறுக்கவில்லை.



AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.07.28 17:20:36 +0530

ஆகையால் புகார்தாரரின் வழக்கறிஞரான கனி என்பவருக்கும், எதிரிக்கும் இடையே வரவு செலவு இருந்துள்ளது என்று தெரியவருகிறது.

10.12. இந்நிலையில், புகார்தாரரை எதிரிக்கு தெரியாது என்றும், அவரிடம் வரவு செலவு வைத்ததில்லை என எதிரி பதில் அறிவிப்பு அனுப்பியும், நீதிமன்றத்தில் சாட்சியமளித்தும், புகார்தாரரை எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்வதன் மூலம் ஆரம்ப காலகட்டத்திலிருந்து மறுத்துள்ளார். புகார்தாரரை எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்தபோது, **"எதிரியின் செல்போன் நம்பர் என்னவென்றால் எனக்கு தெரியாது. எனது செல்போனில் பார்த்து சொல்ல முடியுமா என்றால் எனது செல்போன் ரீசெட் ஆகிவிட்டது"** என்று சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் புகார்தாரரின் செல்போனானது எப்போது ரீசெட் ஆனது என்பதற்கு அவரது தரப்பில் எவ்வித விளக்கமும் அளிக்கவில்லை.

10.13. மேலும் எதிரி புகார்தாரரிடம் பேசியதற்கான அழைப்பு பதிவு பட்டியலை தாக்கல் செய்ய தயார் என்று புகார்தாரர் சாட்சியம் அளித்திருந்தாலும், அதனை நிரூபிக்கும் வகையில் எவ்வித ஆவணங்களும் புகார்தாரர் தரப்பில் தாக்கல் செய்யவில்லை. மேலும் எதிரியை புகார்தாரருக்கு தெரியும் என்றும், அவரிடம் வரவு செலவு இருந்துள்ளது என்பதை நிரூபிக்கும் வகையில் புகார்தாரர் தரப்பில் எவ்வித ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை.

10.14. மேலும் காசோலை திரும்பிய பின்னர் புகார்தாரர் எதிரிக்கு அனுப்பிய முதல் அறிவிப்பானது No such Address என்ற காரணம் குறிப்பிட்டு திருப்பப்பட்டுள்ளது. அதன் பின்னர் புகார்தாரர் எதிரிக்கு வேறு முகவரிக்கு இரண்டாவது அறிவிப்பு அனுப்பியுள்ளார். எதிரி கடன் வாங்கியதாக சொல்லப்படும் சமயத்தில் அவர் இருந்த முகவரியிலிருந்து மாறிவிட்டார் என்று புகார்தாரர் குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை. உண்மையில் புகார்தாரருக்கு எதிரியின் முகவரி தெரிந்திருந்தால் முதலில் அனுப்பப்பட்ட அறிவிப்பானது முறையாக சார்பு செய்யப்பட்டிருக்கும். ஆனால் எதிரியின் முகவரியானது



AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.07.28 17:20:43 +0530

புகார்தாரருக்கு தெரியவில்லை என்பதால்தான் தவறான முகவரிக்கு புகார்தாரர் தரப்பில் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது.

10.15. எதிரி புகார்தாரரின் வழக்கறிஞர் கனி என்பவரிடம் வரவு செலவு வைத்திருந்ததாகவும், தனக்கு புகார்தாரரை தெரியாது என்று ஆரம்ப காலகட்டத்திலிருந்து எதிரி பதில் அறிவிப்பு அனுப்புவதன் மூலமும், நீதிமன்றத்தில் சாட்சியம் அளிப்பதன் மூலமும் எதிர்வாதம் செய்துள்ளார். மேலும் எதிரிக்கும், புகார்தாரரின் வழக்கறிஞர் கனிக்கும் இடையே வரவு செலவு உள்ளது என்பதை ஆவணங்கள் மூலம் எதிரி நிரூபித்துள்ள நிலையில், புகார்தாரருக்கும், எதிரிக்கும் இடையே பழக்கவழக்கம் உள்ளது என்றும், வரவு செலவு இருந்தது என்பதை புகார்தாரர் தரப்பில் நிரூபிக்கவில்லை. மேற்கண்ட விபரங்களினால் உண்மையில் எதிரியை புகார்தாரருக்கு தெரியுமா என்ற சந்தேகம் எழுகிறது.

10.16. மேலும் எதிரி 19.06.2025ம் தேதியன்று புகார்தாரரின் வழக்கறிஞர் கனி மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாக எதிரி கூறியுள்ளார். ஆனால் அவ்வாறு புகார் சம்மந்தமாக எந்த கோப்புகளும் காவல் நிலையத்தில் இல்லை என கூறி தகவல் பெறும் உரிமை சட்டத்தின் கீழ் போலீசார் வழங்கிய அறிக்கையை ம.சா.ஆ.8 ஆன ஆவணமானது எதிரியை குறுக்கு விசாரணை செய்தபோது, புகார்தாரரின் வழக்கறிஞரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

10.17. மேற்படி ஆவணத்தை பரிசீலனை செய்கையில், 19.06.2025ம் தேதியன்று எதிரி காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனு, விசாரணை முடிவு வாக்குமூலங்களை தரவேண்டும் என்று எதிரிதான் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் மூலம் மனு தாக்கல் செய்துள்ளார் என்பது தெரியவருகிறது. எதிரி தகவல் பெறும் உரிமை சட்டத்தின் மூலம் தாக்கல் செய்யப்பட்ட மனுவிற்கு போலீசார் அளித்த அறிக்கையை புகார்தாரரின் வழக்கறிஞரால் குறியீடு செய்யப்பட்டுள்ள நிலையில், புகார்தாரரின் வழக்கறிஞருக்கு போடி நாயக்கனூர்



AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.07.28 17:20:53 +0530

காவல் நிலையத்தில் உள்ள செல்வாக்கை பயன்படுத்தி மேற்படி அறிக்கையை பெற்றுள்ளார் என்பது தெரியவருகிறது.

10.18. மேலும் எதிரி காவல் நிலையத்தில் புகார் கொடுக்காதபட்சத்தில், தகவல் பெறும் உரிமை சட்டத்தின் கீழ் புகார் சம்மந்தமாக ஆவணங்களை கோரி அவர் மனுதாக்கல் செய்திருக்க மாட்டார் என்று கருதப்படுகிறது. ஆகையால் எதிரி காவல் நிலையத்தில் புகார்தாரரின் வழக்கறிஞர் கனி மீது புகார் கொடுத்தார் என்றும், அவர் வழக்கறிஞர் என்பதால் வழக்கு பதிவு செய்யவில்லை என எதிரி தரப்பில் கூறிய வாதமானது ஏற்புடையதாக உள்ளது என்று முடிவு செய்கிறது.

10.19. மேலும் புகார்தாரரை எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்தபோது, "எதிரி அனுப்பிய பதில் அறிவிப்பில் போடியை சேர்ந்த கந்து வட்டி கனி என்பவரிடம் 2021ல் எதிரி பணம் பெற்றதாக குறிப்பிட்டுள்ளது என்றால் தெரியாது என்றும், எதிரியின் இருசக்கர வாகனத்தில் உள்ள சீட் அடியில் வைத்திருந்த காசோலையை எடுத்து என் மூலமாக வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளதாக பதில் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளது என்றால் தெரியாது" என்று புகார்தாரர் சாட்சியம் அளித்துள்ளார்.

10.20. உண்மையில் புகார்தாரரிடம் எதிரி பணம் பெற்று காசோலை கொடுத்ததாக சொல்லப்படும் விபரங்களை புகார்தாரர் அவரது வழக்கறிஞருக்கு தெரிவித்து அறிவிப்பு அனுப்பியிக்கும்பட்சத்தில், எதிரி அனுப்பிய பதில் அறிவிப்பில் உள்ள விபரங்களானது புகார்தாரருக்கு நன்கு தெரிந்திருக்கும். ஆனால் புகார்தாரரின் வழக்கறிஞர் கனியிடம்தான் எதிரி வட்டிக்கு கடன் பெற்றதாக பதில் அறிவிப்பில் கூறிய விபரமானது தனக்கு தெரியாது என புகார்தாரர் சாட்சியம் அளித்துள்ளதால் புகார்தாரர் வழக்கின் மீது நியாயமான சந்தேகம் எழுகிறது.

10.21. இவ்வழக்கில், புகார்தாரரின் வழக்கறிஞர் கனியும், அவருடன் சேர்ந்த நபர்களும் எதிரியின் இருசக்கர வாகனத்தை எடுத்து கொண்டார்கள் என்றும், மேற்படி இருசக்கர வாகனத்தில் இருந்த காசோலையை எடுத்து



AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.07.28 17:21:00 +0530

புகார்தாரர் மூலம் வழக்கு தாக்கல் செய்துள்ளதாக எதிரி தரப்பில் வாதிக்கப்பட்டது. புகார்தாரரை எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்தபோது, "09.06.2025 ம் தேதியன்று கனி என்பவரும், அவருடன் சேர்ந்த மற்ற இரண்டு நபர்களும் எதிரியின் இருசக்கர வாகனத்தை பறித்து கொண்டதாக பதில் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளது என்றால் எடுத்திருக்கலாம்" என புகார்தாரர் சாட்சியம் அளித்துள்ளார்.

10.22. மேற்படி எதிரியின் வாகனத்தை புகார்தாரரின் வழக்கறிஞர் எடுத்ததாக கூறும் சம்பவத்தை குறித்து புகார்தாரரிடம் கேள்வி கேட்கப்பட்ட போது, எதிரியின் வாகனத்தை புகார்தாரரின் வழக்கறிஞர் எடுக்கவில்லை அல்லது அது சம்மந்தமான விபரங்கள் தனக்கு தெரியாது என புகார்தாரர் குறிப்பிட்டு சாட்சியம் அளிக்காமல், எதிரியின் இருசக்கர வாகனத்தை புகார்தாரரின் வழக்கறிஞர் எடுத்திருக்கலாம் என்று சாட்சியம் அளித்துள்ளதால், எதிரி தரப்பு வாதத்தில் கூறிய விபரங்கள் நடந்திருக்ககூடுமா என்ற சந்தேகம் எழுகிறது.

10.23. மேலும் எதிரி நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்த பின்பு 11.05.2026 ம் தேதியன்று புகார்தாரரின் வழக்கறிஞர் கனி சார்பில் எதிரிக்கும், எ.சா.2 ஆன தர்மர் என்பவருக்கும் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது. மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பினை எ.சா.ஆ.1 ஆக எ.சா.2 ன் மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி அறிவிப்பினை பரிசீலனை செய்கையில், எதிரி அனுப்பிய பதில் அறிவிப்பில் உள்ள விபரங்களானது பொய் என்றும், அவ்வாறான அவதூறு செயலுக்காக எதிரி மற்றும் தர்மர் மீது உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்கு தாக்கல் செய்ய போவதாக அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது.

10.24. இவ்வழக்கில், 07.07.2025 ம் தேதியன்று எதிரி புகார்தாரருக்கும், அவரது வழக்கறிஞர் கனி என்பவருக்கும் பதில் அறிவிப்பு அனுப்பிய பிறகு எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் புகார்தாரரின் வழக்கறிஞர் அமைதி



AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.07.28 17:21:08 +0530

காத்துவிட்டு வழக்கு விசாரணையானது முடியும் தருவாயில் எ.சா.ஆ.1ஆன அறிவிப்பை அனுப்பியுள்ளார். ஆகையால் மேற்படி அறிவிப்பு அனுப்பிய காரணத்தினால் மட்டுமே புகார்தாரர் வழக்கின் மீது ஏற்பட்ட சந்தேகமானது தீர்க்கப்பட்டதாக தீர்மானிக்க இயலாது என்று முடிவு செய்கிறது.

10.25. மேலும் புகார் மனுவில், எதிரி மட்டும் வந்து பணம் பெற்று சென்றதாக குறிப்பிட்டுள்ளது. எதிரியை புகார்தாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்தபோது, "நானும், தர்மரும் புகார்தாரரிடம் பணம் வாங்கினேன் என்று கேட்கப்பட்ட கேள்விக்கு எதிரி மறுத்து" சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி எதிரி மட்டும் வந்து பணம் பெற்றதாக புகார்மனுவில் உள்ள விபரங்களுக்கு முரண்பட்டு எதிரியும், எ.சா.2 தர்மரும் வந்து கடன் பெற்றதாக புகார்தாரரின் வழக்கறிஞர் கூறியுள்ளார். மேற்படி முரண்பாடுகளை குறித்து புகார்தாரர் தரப்பில் எவ்வித விளக்கமும் அளிக்கவில்லை.

10.26. பொதுவாக காசோலை வழக்கில், புகார்தாரரின் வழக்கறிஞரை குற்றம்சாட்டி எதிரி பதில் அறிவிப்பு அனுப்புவது அரிதான சூழ்நிலையாகும். அவ்வாறு பதில் அறிவிப்பு அனுப்பும்பட்சத்தில், அதே வழக்கறிஞரை வைத்து புகார்தாரர் வழக்காடுவதும் இயல்பான செயலில்லை என்பதாகும். இவ்வழக்கில், புகார்தாரரின் வழக்கறிஞரை குற்றம்சாட்டி எதிரி பதில் அறிவிப்பு அனுப்பியிருக்கும்பட்சத்தில், அதனை மறுத்து உடனடியாக புகார்தாரரின் வழக்கறிஞர் பதில் அறிவிப்பு எதிரிக்கு அனுப்பியிருக்க வேண்டும். ஆனால் புகார்தாரரின் வழக்கறிஞர் எதிரிக்கு உடனடியாக பதில் அறிவிப்பு அனுப்பாமல் இவ்வழக்கினை தாக்கல் செய்து எதிரியை குறுக்கு விசாரணை செய்துள்ளார். மேலும் புகார்தாரருக்கு எதிரியின் செல்போன் எண் தெரியாது என்றும், எதிரியின் முகவரியை புகார்தாரர் பார்த்ததில்லை என்று கூறியுள்ளதால் புகார்தாரருக்கு எதிரியை தெரியுமா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. மேலும் புகார்தாரரின் வழக்கறிஞருக்கும், எதிரிக்கும் இடையே வரவு செலவு இருந்துள்ளது என்று எதிரி தரப்பின் ஆவணம் மூலம் தெரிகின்ற நிலையில்,



AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.07.28 17:21:15 +0530

மேற்படி தொகைகளானது எதற்காக செலுத்தப்பட்டது என்பதை குறித்து புகார்தாரர் தரப்பில் எவ்வித விளக்கம் அளிக்காத காரணத்தினால் புகார்தாரரின் வழக்கின் மீது சந்தேகம் எழுகிறது. எனவே புகார்தாரருக்கு ஆதரவாக இருக்கும் மாற்றுமுறை ஆவண சட்டத்தின் பிரிவு 118(a) மற்றும் பிரிவு 139 கீழான அனுமானங்களை எதிரி தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் மறுக்கப்பட்டுள்ளது என்று முடிவு செய்கிறது.

10.27. புகார்தாரரின் வழக்கினை எதிரி தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் மூலம் மறுக்கப்பட்டுள்ள நிலையில், எதிரி புகார்தாரரிடம் ரூ.2 லட்சம் கைமாற்றுக்கடன் வாங்கினார் என்றும், அதற்கு ஆதரவாக தாவா காசோலையை கொடுத்தார் என்று நிரூபிக்கும் சுமையானது புகார்தாரருக்கே திரும்புகிறது. ஆனால் புகார்தாரரின் வழக்கை நிரூபிக்கும் வகையில் அவரது தரப்பில் காசோலையை தவிர்த்து வேறு ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை மற்றும் புகார்தாரரை தவிர்த்து வேறு நபர்களை அவரது தரப்பில் சாட்சியாக விசாரிக்கவில்லை.

10.28. இந்நிலையில், புகார்தாரர் காசோலையை தனது பொறுப்பில் வைத்திருப்பதால் மட்டுமே அவரது தரப்பு வழக்கானது நிரூபிக்கப்பட்டதாக தீர்மானிக்க முடியாது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே காசோலையில் கண்ட தொகையானது சட்டத்தினால் வலியுறுத்தக்கூடியது அல்ல என்றும், புகார்தாரர் நீதிமன்றத்திற்கு தூயகரங்களுடன் அணுகவில்லை என்பதால் எதிரிக்கு எதிரான மாற்றுமுறை ஆவணச் சட்டம் பிரிவு 138–ன் கீழ் குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**11. <u>முடிவு:</u>**

முடிவாக, எதிரி மீது பிரிவு 138 மாற்றுமுறை ஆவண சட்டத்தின் கீழ் குற்றவாளி இல்லை என தீர்மானித்து பிரிவு 278(1) BNSS ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.



AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.07.28 17:21:22 +0530

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் சரிபார்க்கப்பட்டு 2026ம் வருடம் ஜீலை மாதம் 28-ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

AMALANATHA KAMALAKANNAN S

Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.07.28 17:22:57 +0530

**நீதித்துறை நடுவர்,**
**விரைவு நீதிமன்றம், உத்தமபாளையம்.**

**1. <u>புகார்தாரர் தரப்பு சாட்சி:</u>**

| | | |
|---|---|---|
| 1 | ம.சா.1 | திரு.பாலமுருகன் (புகார்தாரர்) |

**2. <u>புகார்தாரர் தரப்பு சான்றவணங்கள்:</u>**

| | | |
|---|---|---|
| 1 | ம.சா.ஆ.1 | 10.06.2025 நாளிட்ட 100009 என்ற எண் கொண்ட CSB வங்கி, போடி நாயக்கனூர் கிளைக்குரிய ரூ.2,00,000/-க்கான காசோலை அசல் |
| 2 | ம.சா.ஆ.2 | 11.06.2025 நாளிட்டு திருப்பி அனுப்பப்பட்ட வங்கி குறிப்புரை அசல் |
| 3 | ம.சா.ஆ.3 | 17.06.2025 மற்றும் 18.062025 நாளிட்டு புகார்தாரர் எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அஞ்சலக இரசீது அலுவலக அசல் மற்றும் அறிவிப்பை எதிரி பெற்றுக்கொள்ளாமல் திருப்பப்பட்ட கவர் அசல் |
| 4 | ம.சா.ஆ.4 | 25.06.2025 புகார்தாரர் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் இரசீது அலுவலக நகல் மற்றும் அசல் |
| 5 | ம.சா.ஆ.5 | 01.07.2025 நாளிட்டு எதிரி வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை அசல் |
| 6 | ம.சா.ஆ.6 | 07.07.2025 நாளிட்டு எதிரி அனுப்பிய பதில் அறிவிப்பு அசல் |
| 7 | ம.சா.ஆ.7 | புகார்தாரரின் ஆதார் அடையாள அட்டை நகல் |
| 8 | ம.சா.ஆ.8 | 19.06.2025ம் தேதியன்று எதிரி போடி காவல் நிலையத்தில் எந்த புகாரும் கொடுக்கவில்லை என்று தகவல் பெறும் உரிமை |

| | | |
|---|---|---|
| | | சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுவிற்கு அளித்த அறிக்கை |

**3. புகார்தாரர் தரப்பு சான்றுபொருள்: இல்லை**

**4. எதிரி தரப்பு சாட்சிகள்:**

| | | |
|---|---|---|
| 1 | எ.சா.1 | திரு.கண்ணபிரான் |
| 2 | எ.சா.2 | திரு.தர்மர் |

**5. எதிரி தரப்பு சான்றாவணங்கள்:**

| | | |
|---|---|---|
| 1 | எ.சா.ஆ.1 | புகார்தாரரின் வழக்கறிஞர் கனி எதிரிக்கும், எ.சா.2 க்கும் அனுப்பிய பதில் அறிவிப்பு |
| 2 | எ.சா.ஆ.2 | எதிரி புகார்தாரரின் வழக்கறிஞர் கனிக்கு G Pay மூலம் அனுப்பிய பரிவர்த்தனைகள் |

**6. எதிரி தரப்பு சான்றுபொருள்: இல்லை**

AMALANATHA KAMALAKANNAN S

Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.07.28 17:23:04 +0530

**நீதித்துறை நடுவர்,**
**விரைவு நீதிமன்றம், உத்தமபாளையம்.**